முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கடலூர்.

O.S.No.76/2019 நாள்: 02.03.2023 D.W.1 உமாமகேஸ்வரி

D.W. 1 சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராகி சத்திய பிரமாணம் எடுத்து வைக்கப்பட்டு

வாதி தரப்பிலான குறுக்கு விசாரணை

எனக்கும் செந்தில்குமாருக்கும் 2003 ல் திருமணம் நடந்தது. வாதி உஷா செந்தில்குமாரின் தங்கை ஆவார். என் கணவர் செந்தில்குமார் வெளிநாட்டில் வசிக்கிறார். என் கணவர் இந்த வழக்கை நடத்துவதற்கு எனக்கு அதிகாரம் கொடுத்துள்ளார். திருமணத்திற்கு முன்னர் என் கணவர் எனக்கு உறவு இல்லை. உஷா கொடுத்த அறிவிப்பிற்கு என் கணவர்தான் பதில் அறிவிப்பு கொடுத்தார். என் கணவர் என் தொலைபேசி மூலம் அவர் வழக்கறிஞரிடம் தகவல் சொல்லி பதில் அறிவிப்பு கொடுக்க வைத்தார். உஷாவின் தந்தை பெயர் ராமகிருஷ்ணன். ராமகிருஷ்ணன் மனைவி பெயர் கஸ்தூரி ஆவார். என் மாமியார் கஸ்தூரியின் சொந்த ஊர் குறிஞ்சிப்பாடி அருகே உள்ள ஆடுர்குப்பம். என் மாமனார் ராமகிருஷ்ணனுடன் பிறந்தவர்களில் என் மாமனாரையும் சேர்த்து 4 பேர் ஆவார்கள். தாவா பி ஷெடியூல் 17 அயிட்டம் அனைத்தும் என் மாமனாருக்கு அவர் சகோதரர்களோடு ஏற்பட்ட 26.02.1974 தேதியிட்ட பாகப்பிரிவினையில் கிடைத்தது. 26.02.1974 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின்படி என் மாமனாருக்கு பூர்வீக சொத்துக்கள் பாகம் பிரித்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். பாகப்பிரிவினையில் கண்ட பி அட்டவணை சொத்துக்கள் அனைத்தும் பண்ரூட்டி தாலுக்கா சிறுகிராமம் என்ற ஊரில் உள்ளது. சிறுகிராமத்தில் அமைந்துள்ள நிலங்களை நான் பார்த்துள்ளேன். பாகப்பிரிவினையில் கண்ட பி அட்டவணை சொத்துக்கள் அனைத்தும் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. அது 31 ஆண்டுகளாக முள் காடாகதான் உள்ளது. என் மாமியார் இறந்தபிறகுதான் நான் சிறுகிராமத்தில் உள்ள நிலங்களை போய் பார்த்து வந்தேன். என் மாமனாரும் துபாயில் இருந்தார். என் மாமனார் துபாய்க்கு வேலைக்கு போனவுடன் சிறுகிராமத்தில் உள்ள நிலங்களை என் மாமியார்தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. அது முள்காடாகவே இருந்து வருகிறது. தாவா பி அட்டவணை சொத்துக்களின் அடங்கல் கணக்கை பார்த்தால் அதில் என்ன சாகுபடி செய்யப்பட்டது என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். என் மாமியார் என் மாமனார் வெளிநாடு போனதிலிருந்தே மாமியாரின் அம்மா வீடான ஆடுர்குப்பத்திற்கு சென்று விட்டார். என் மாமியார் என் மாமனார் வெளிநாடு சென்ற பிறகு தையல் தொழிலும், சீட்டு பிடி தொழிலும் செய்து வந்தார் என்றால் தையல் தொழில் செய்யவில்லை. குறிஞ்சிப்பாடி வந்து ஏலச்சீட்டு நடத்தி வந்தார். என் மாமியார் குரோஷா ஒயரில் கூடை பின்னும் தொழில் செய்வார். என் மாமியார் ஆடுர்குப்பத்தில் இருந்தபோதுதான் வழக்கு ஏ ஷெடியூர்சொத்தை கிரையம் வாங்கினார். வழக்கு ஏ ஷெடியூல் சொத்துக்களை என் மாமியார் தன் சொந்த வருமானத்தில் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. என் மாமனார் அனுப்பிய பணத்தில்தான் சொத்தை கிரையம் வாங்கினார். என் மாமனார் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பி அந்த பணத்தில் வழக்கு ஏ ஷெடியூல் சொத்தை கிரையம் வாங்கினார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என் மாமியார் தந்தை கோவிந்தசாமி நாயுடு சுதந்திர போராட்ட தியாகி. மேலும் கிராம சேவகராகவும் இருந்தார். என்

மாமியார் கஸ்தூரியின் அண்ணன் பெயர் வீராசாமி. வீராசாமி ஆடுர்குப்பம் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி வந்தார். வீராசாமி தன் சகோதரி கஸ்தூரிக்கும் சகோதரி மகளான வாதி உஷாவுக்கும் பண உதவிகள் செய்து வந்தார் என்றால் சரியல்ல. ஏ ஷெடியூல் சொத்தில் மெத்தை வீடு உள்ளது. ஏ ஷெடியூல் சொத்தில் உள்ள வீடு கஸ்தூரியின் வருமானத்தை கொண்டு கட்டது என்றால் சரியல்ல. என் மாமனார் வருமானத்தைக்கொண்டு கட்டப்பட்டது. என் மாமனார் வருமானத்தைக்கொண்டுதான் ஏ ஷெடியூல் சொத்தில் மெத்தை வீடு கட்டப்பட்டது என்பதற்கு ஆதாரங்கள் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்துக்களில் உஷாவுக்கும் பாகம் உண்டு என்றால் சரியல்ல. என் மாமனார் மாமியாருக்கு உடல்நிலை சரியில்லாதபோது வைத்திய செலவுக்கும் குடும்ப நிர்வாகத்தை என் கணவர் செய்ததாலும் உஷாவுக்கு சீர்வரிசைகள் செய்ததாலும் உஷாவுக்கு சொத்தில் பங்கு இல்லை என்று சொல்லுகிறேன். உஷாவின் திருமணம் என் திருமணத்திற்கு முன்னரே நடந்துவிட்டது. உஷா குடும்ப கடனில் பங்கெடுத்து கொண்டால் அவருக்கு சொத்தில் பங்கு தர தயாராக உள்ளேன். எங்கள் குடும்பத்திற்கு என்ன கடன் உள்ளது என்ற விபரத்தை என் கணவர் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் மாமனாருக்கு மூளையில் ஸ்டோர்க் வந்து அதனால் வலது கையும், காலும் முழுமையாக செயல்படாது இருந்தது என்றால் சரிதான். என் மாமனார் 19.04.2018 ல் இறந்துபோனார். என் மாமனாருக்கு மூளையில் ஸ்டோர்க் வந்தது 2016 ம் ஆண்டு. என் மாமனாருக்கு கிருஷ்ணா மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. 02.04.2018 முதல் 10.04.2018 வரை என் மாமனார் மணக்குள வினாயகர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரிதான். என் மாமனார் மூச்சு திணரல் நோய்க்காக மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் அதுமாதிரி எல்லாம் இல்லை. நான் உயில்மூலமாகவும் என் கணவருக்கு சொத்தில் உரிமை உள்ளது என்று சொல்லுகிறேன். குறிஞ்சிப்பாடியில் எங்கள் வீட்டில் வைத்துதான் உயில் எழுதப்பட்டது. அந்த விபரம் எனக்கு தெரியும். பண்ருட்டியை சேர்ந்த வக்கீல் குமரன், பத்திர எழுத்தர், சாட்சிகள் சுந்தரமூர்த்தி, செந்தில்குமார் ஆகியோர்கள் உயில் எழுதும்போது இருந்தார்கள். என் மாமனார்தான் வக்கீல் குமரனுக்கு தகவல் கொடுத்து வீட்டிற்கு வரச்சொன்னார். எங்கள் குடும்ப சொத்துக்களை குறித்து என் மாமனார் வேறு ஏதேனும் ஆவணம் எழுதியுள்ளாரா என்று எனக்கு தெரியாது. என் மாமனார் தன் ஆயுள்காலத்திலேயே கலந்து ஆலோசித்து உயில் எழுதவேண்டும் என்று சொன்னார். என் மாமனார் அவர் இறப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் உயில் ஆவணத்தை எழுதினார். தனக்கு ஸ்டோர்க் வந்ததிலிருந்தே உயில் எழுதவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருந்தார். உயிலில் கண்ட சாட்சிகளை என் மாமனார்தான் அழைத்து வந்தார். உயிலை எழுதியது விவேகானந்தார். அவர் சொந்த ஊர் குறிஞ்சிப்பாடி. ஆனால் அவர் குடியிருப்பது ராசாக்குப்பம். எனக்கு என் கணவர் வழங்கிய பொது அதிகாரப்பத்திரத்ல் உள்ள சாட்சிகள்தான் என் மாமனார் எழுதிய உயில் ஆவணத்திலும் சாட்சிகள் ஆவார்கள். உயில் எழுதும்போது என் மாமனார் என்ன ஆவணம் வைத்திருந்தார் என்று எனக்கு தெரியாது. என் மாமனார்தான் பத்திரம் எழுதிய நபரிடம் சொல்லி பணம் கொடுத்து உயிலுக்கான முத்திரைத்தாள்களை வாங்கி வரச்சொன்னார். என் மாமனார் ஆங்கிலத்தில் கையெழுத்து போடுவார்.

ஆனால் உயிலில் என் மாமனார் கைரேகைதான் வைத்துள்ளார். வலது கை, கால் வராததால் என் மாமனார் இடது கை ரேகை வைத்தார். உயிலில் பக்க வாத நோய் ஏற்பட்டதால் வலது கையால் கையொப்பம் போடப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் மாமனாரேதான் ரேகைகள் வைத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.த.சா.ஆ.1 உயில் பத்திரத்தில் பக்கம் 8 முதல் 16ல் கைரேகைகள் சரியாக வைக்கப்படாமல் பல கோணங்களில் வைத்தது போலும் ஒன்றுக்கு இரண்டு முறை வைத்தது போலும் உள்ளது என்றால் சரிதான். என் மாமனார் உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் அவரால் ரேகைகள் சரியாக வைக்க முடியவில்லை. அதனால் பேப்பரில் விரல் வைத்து உருட்டியபோது வேறு வேறு கோணத்தில் உள்ளது. பி.வா.த.சா.ஆ.1 உயில் பதிவு செய்யப்படவில்லை. குறிஞ்சிப்பாடி எங்கள் வீட்டிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவிற்குள் பதிவாளர் அலுவலகம் உள்ளது. உயிலில் உஷாவுக்கு வீட்டில் 3ல் 1 பங்கு கொடுக்கப்பட்டுள்ளது. உஷாவுக்கு ஏ ஷெடியூல் சொத்தில் உயிலில் எந்த பாகமும் கொடுக்கப்படவில்லை. உயிலில் தன் மகள் உஷா இருப்பதை பற்றி என் மாமனார் எந்த வாசகமும் சொல்லவில்லை. உஷாவுக்கு வழக்கு சொத்துக்களில் ஏன் பாகம் கொடுக்கவில்லை என்பதற்கு காரணங்கள் எதுவும் என் மாமனார் உயிலில் சொல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் மாமனார் உஷாவுக்கு சீர்வரிசைகள் செய்ததால் சொத்தில் பாகம் கொடுக்கவில்லை என்று உயிலில் குறிப்பிட்டு சொல்லவில்லை. குறிஞ்சிப்பாடி மற்றும் அருகாமை கிராமங்களில் வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். இருந்தும் ஏன் பண்ரூட்டிக்கு சென்று வழக்கறிஞரை வரவழைக்கவேண்டிய காரணம் என்ன என்றால் எனக்கு காரணம் தெரியவில்லை. என் மாமனாருக்கு பழக்கமாக இருக்கலாம். என் மாமனார்தான் வழக்கறிஞரை வரவழைத்தார். பி.வா.த.சா.ஆ.1 உயிலை என் மாமனார் தன்னிச்சையாக எழுதவில்லை என்றால் சரியல்ல. மேற்படி உயிலை எண் கணவரும், நானும், எழுத்தர் விவேகானந்தரும் சேர்ந்து ஜோடித்துள்ளோம் என்றால் சரியல்ல. என் மாமனார், மாமியாருக்கு மருத்துவ செலவுக்காக கடன் வாங்கியதாக சொல்லும் விபரங்கள் எதுவும் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. என் மாமனார் மற்றும் மாமியார் மருத்துவ செலவிற்காக நாங்கள் கடன் வாங்கியதாக சொல்லும் கடன்காரர்கள் எங்கள் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை. உஷாவுக்கு தன் பெற்றோர்களின் முதல்நிலை வாரிசு என்ற அடிப்படையில் என் கணவரோடு சேர்ந்து சமபாகம் உரிமையுண்டு என்றால் சரியல்ல. நாங்கள் தவறான ஆவணங்களை தயாரித்துக்கொண்டு பொய்யாக கட்சி ஆடுகிறோம் என்றால் சரியல்ல. தாவா உயில் பி.வா.த.சா.ஆ.1 என் மாமனார் நல்ல மனநிலையிலும், திடகாத்திரமான உடல்நிலையிலும் இருக்கும்போது ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் மாமனார் நல்லநிலையில் இருக்கும்போதுதான் எழுதினார். உயில் 16.04.2018ல் எழுதப்பட்டது. என் மாமனார் 19.04.2018ல் இறந்துவிட்டார். உயில் எழுதுவதற்கு முன்பாகவே மாதிரி உயில் எழுதப்பட்டதா என்றால் என் மாமனார் சொல்ல சொல்ல எழுதப்பட்டது. உயிலில் உள்ள சொத்து விபரங்கள் எதை பார்த்து எழுதப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

மறு விசாரணை இல்லை